சார்பு நீதிமன்றம், பத்மனாபபுரம்

முன்னிலை: திரு. K. மாரியப்பன், பி.ஏ., பி.எல்.,

சார்பு நீதிபதி

2026-ம் ஆண்டு ஜுன் திங்கள் 05-ம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண் 304/2024**

**CNR. No.TNKK07-000718-2024**

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா ,
முட்டைக்காடு கிளை,
அதற்காக அதன் கிளை மேலாளர்
(Formerly known as State Bank of Travancore) ... வாதி

/எதிர்/

1. N. எபின்கிளின் சிவி (Ebinclin Sivi)
2. A. நெல்சன் ... பிரதிவாதிகள்

இந்த வழக்கு 06.04.2026 தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. A.R. அருண் செல்லராம், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளுக்கு சம்மன் சார்பு செய்தும், பிரதிவாதிகளை அழைத்தும் ஆஜராகாததால் பிரதிவாதிகளை பொறுத்து ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்காவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இதுநாள்வரையில் எனது கவனமான பரிசீலனையின்கீழ் இருந்து வந்த பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்:

**தீர்ப்புரை**

வழக்குரை தொகை ரூ.2,07,102/-ஐ 14% வருட வட்டியுடனும் மற்றும் வழக்கின் செலவு தொகைகளையும் பிரதிவாதிகளியிடம் இருந்தும், அவர்களது

சொத்துக்களில் இருந்தும் வசூலிக்க கோரி வாதி வங்கியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்/ ;?</u>**

வாதி வங்கியில் கடந்த 23.10.2013 அன்று 1வது பிரதிவாதி ரூ.2,07,102/- கடன் கேட்டதினிமித்தம் வாதி வங்கி 1வது பிரதிவாதிக்கு B.Sc. Nursing படிப்பதற்காக வேண்டி 14.03.2014அன்று ரூ.2,07,102/- கடன் வழங்க அனுமதி அளித்தது. மேற்படி கடனுக்கு 14% வட்டி தருவதாகவும் 84மாத தவணைகளாக செலுத்துவதாகவும் பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டுள்ளார்கள். 14.03.2014 அன்று பிரதிவாதிகள் கடன் ஒப்பந்தம் எழுதி கொடுத்துள்ளார்கள். மேற்படி கடன் தொகை சம்பந்தமாக11.07.2018, 25.06.2021 மற்றும் 26.04.2022 ஆகிய தேதிகளில் பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு உயிர்ப்பிப்பு கடிதங்கள் எழுதி கொடுத்ததுள்ளார்கள். பிரதிவாதிகள் மேற்படி கடன் தொகையை தனியாகவோ அல்லது கூட்டாக செலுத்த கடமைப்பட்டும் செலுத்தாததால் வாதி வங்கி, பிரதிவாதிகளுக்கு 24.07.2024 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியது. மேற்படி அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டும் எந்த பதிலோ, பணமோ திருப்பி தரவில்லை. எனவே தாவா கடன் தொகையை வட்டியுடன் வசூலிக்க கோரி வாதி வங்கியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. பிரதிவாதிகளுக்கு சம்மன் சார்பு செய்தும், பிரதிவாதிகளை அழைத்தும் ஆஜராகாததால் பிரதிவாதிகளை பொறுத்து ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டுள்ளார்கள்.

4. வாதி தரப்பில், வாதி வங்கியின் கிளை மேலாளர் திருமதி. அனிஷா என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் 9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், வழக்குரையில் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

6. வாதி தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வா.சா.1 ஆக வாதி வங்கியின் கிளை மேலாளர் விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகளை ஒத்துரைத்து சாட்சியம் அளித்து வா.சா.ஆ.1 முதல் 9 வரையிலான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். வா.சா.ஆ1–ஐ பார்வையிடும் போது 23.10.2013ம் தேதியிட்ட கல்வி கடன் விண்ணப்பம் என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.2 ஐ பார்வையிடும் போது 14.03.2014 ம் தேதியிட்ட கடன் அனுமதி கடிதம் என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.3 ஐ பார்வையிடும் போது 14.03.2014ம் தேதியிட்ட கடன் ஒப்பந்தம் என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ. 4 முதல் 6 ஐ பார்வையிடும் போது 11.07.2018, 25.06.2021 மற்றும் 26.04.2022 ஆகிய தேதிகளில் கடன் உயிர்ப்பிப்பு கடிதங்கள் என்பதையும், அதில் கடன் தொகை ரூ.2,07,102/– என்றும் 14% வட்டி என்பதையும் 84 மாத தவணைகளாக செலுத்துவதாகவும் பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்பதையும் இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது. வா.சா.ஆ.7 ஐ பார்வையிடும் போது 24.07.2024 அன்று பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் மற்றும் அஞ்சலக ரசீதுடன் அடங்கிய கோர்வை என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.8 ஐ பார்வையிடும் போது 15.07.2024ம் தேதியிட்ட வங்கி கணக்கு விபரப்பட்டியல் என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.9 ஐ பார்வையிடும் போது வங்கிகளின் ஒருங்கிணைப்பு அறிக்கை என்பதை அறிய முடிகிறது.

7. மேலே விவாதிக்கப்பட்டதன் அடிப்படையிலும், வா.சா.ஆ.1 முதல் 9 வரையிலான ஆவணங்களின் மூலமாகவும், வா.சா.1–ன் சாட்சியத்தின் மூலமாகவும் வாதி வங்கியில் பிரதிவாதிகள் கடனாக ரூ.2,07,102/– பெற்றுக்கொண்டுள்ளார் என்பதையும், மேற்படி கடன் தொகைக்கு 14% வட்டி

தருவதாக ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்பதையும், தாவா கடன் தொகையை வாதி வங்கிக்கு, பிரதிவாதிகள் செலுத்த வேண்டியதில்லை என்பதாக பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வாதம் செய்ய முன்வராத நிலையிலும், வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் ரூ.2,07,102/- வட்டியுடன் செலுத்த வேண்டியது உள்ளது என்பது வாதி வங்கி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேற்படி கடன் தொகையை வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் செலுத்தவில்லையென்றும், மேற்படி கடன் தொகைக்கு நிலுவையாக ரூ.2,07,102/- இருந்து வருகிறது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே வழக்குரை தொகை ரூ.2,07,102/-ற்கு வழக்கு தாக்கல் செய்த காலத்தில் இருந்து தொகை வசூலாகும் காலம் வரை 6% வருட வட்டியுடனும், வழக்கின் செலவு தொகைகளையும் வாதி வங்கி, பிரதிவாதிகளியிடமிருந்தும், அவர்களது சொத்துக்களிலிருந்தும் வசூலித்து கொள்ள உரிமை உடையது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட்டு, வழக்குரை தொகை ரூ. 2,07,102/-ற்கு வழக்கு தாக்கல் செய்த காலத்தில் இருந்து தொகை முழுவதும் வசூலாகும் காலம் வரை 6% வருட வட்டியுடனும், வழக்கின் செலவு தொகைகளையும் வாதி வங்கி, பிரதிவாதிகளியிடமிருந்தும், அவர்களது சொத்துக்களிலிருந்தும் வசூலித்து கொள்ள உரிமை உடையது என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளரிடம் சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026-ம் ஆண்டு ஜுன் திங்கள் 05 ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K MARIAPPAN
Digitally signed by K MARIAPPAN
Date: 2026.06.08 14:48:15 +0530

சார்பு நீதிபதி,

பத்மனாபபுரம்

**வாதி தரப்பு சாட்சிகள்/ ;**

வா.சா.1 திருமதி. அனிஷா (வாதி வங்கியின் கிளை மேலாளர்)

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்/ ;**

– இல்லை –

**வாதி தரப்பு சான்றாவணங்கள்/ ;**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | 23.10.2013ம் தேதியிட்ட கடன் விண்ணப்பம் |
| வா.சாஆ.2 | 14.03.2014ம் தேதியிட்ட கடன் அனுமதி கடிதம் |
| வா.சா.ஆ.3 | 14.03.2014ம் தேதியிட்ட கடன் ஒப்பந்தம் |
| வா.சா.ஆ.4 | 11.07.2018ம் தேதியிட்ட உயிர்ப்பிப்பு கடிதம் |
| வா.சா.ஆ.5 | 25.06.2021 ம் தேதியிட்ட உயிர்ப்பிப்பு கடிதம் |
| வா.சா.ஆ.6 | 26.04.2022 ம் தேதியிட்ட உயிர்ப்பிப்பு கடிதம் |
| வா.சா.ஆ.7 | 24.07.2024 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீது |
| வா.சா.ஆ.8 | 15.07.2024 ம் தேதியிட்ட வங்கி கணக்கு விபரப்பட்டியல் |
| வா.சா.ஆ.9 | வங்கிகளின் ஒருங்கிணைப்பு அறிக்கை |

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்/ ;**

–இல்லை–

K MARIAPPAN

Digitally signed by K MARIAPPAN
Date: 2026.06.08 14:48:23 +0530

சார்பு நீதிபதி,

பத்மனாபபுரம்